# உடன்பிறப்பே... 94

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ‘கோடம்பாக்கம்’ சிவலிங்கம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# ‘கோடம்பாக்கம்’ சிவலிங்கம்
# மொழிப்போர்க் களத்தின் தீப்பந்தம்!

இன்று மொழிப்போர்த் தியாகிகள் நாள். இன்றுதான், மொழிக்காகத் தன் உடலை ஈந்த கழக உடன்பிறப்பு தியாகி, கீழப்பழூர் சின்னச்சாமி அவர்களின் நினைவு நாள். விடிந்தால் தியாகி ‘கோடம்பாக்கம்’ சிவலிங்கம் அவர்களின் தீக்குளிப்பு. மொழி உணர்வும், கழகப் பற்றும் வேறுவேறல்ல என தமிழ்நாட்டு இளைஞர்கள் வெகுண்டு, வீதியில் திரண்ட இந்த நாளின் நினைவுகள் ‘நெருப்பாற்றைக் கடந்த எதிர்நீச்சல்’ எனச் சொல்வர் அந்த நாளில் இளைஞர்களாக இருந்த, இன்றைய நமது வழிகாட்டிகள்.

1965-ஆம் ஆண்டு குடியரசு நாள் முதல், இந்தியா முழுவதும் இந்தி ஆட்சிமொழியாகும் என அன்றைய ஒன்றிய அரசின் அறிவிப்புக்கு எதிராக சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தினை அறிவித்தது கழகம். போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் முத்தமிழறிஞர் கலைஞர். 1964 -ஆம் ஆண்டு முழுவதும் பற்றி எரிந்தது இந்தி எதிர்ப்புக்கான அறப்போராட்டம். அறப்போர் பட்டியலில் தங்களது பெயரும் இருக்க வேண்டும் என ஒட்டுமொத்த கழக உடன்பிறப்புகளும் உணர்வு எழுச்சியில் இருந்தனர்.

‘1964-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதி, தன் உடலை ஆயிரமாயிரம் இளைஞர்கள் போராட்ட ஆயுதமாக ஏந்தட்டும்’ என தன்னை நெருப்புக்கு மாய்த்துக் கொண்டார் கீழப்பழூர் சின்னச்சாமி. சின்னச்சாமியின் இறப்பினையே தாங்க முடியாத நிலையில், ‘சின்னச்சாமியைப் போல பத்து தமிழனாவது உயிராயுதம் ஏந்தினால்தான், ஒன்றிய அரசு விழிக்கும்போல’ என சொல்லிக் கொண்டிருந்தவர் சிவலிங்கம். சென்னை, நுங்கம்பாக்கம் கிளைக் கழகத்தின் பொருளாளர்.

ஆனால், அவரே உயிராயுதமாவார் என அவரது வீட்டினர் நினைத்திருக்க வாய்ப்பில்லை. ஏன், அவரேகூட நினைத்திருக்க வாய்ப்பில்லை, ஆனால், மொழி காக்கும் உணர்வும், உந்துதலும் எந்த எல்லைக்கும் கொண்டு செல்லும் என்பதுதான் அன்றைக்கு இருந்த நிலவரம்.

‘1965-ஆம் ஆண்டு குடியரசு நாளைத் துக்கநாளாகக் கொண்டாட அழைப்பு விடுத்தார்’ பேரறிஞர் அண்ணா. அன்றைய தினம், தமிழர் ஒவ்வொருவர் வீடுகளிலும் கறுப்புக்கொடி ஏற்றப்படும் என்றும், மாலையில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என்றும் அறிவித்திருந்தார்.

தமிழ்நாடு முழுவதும் மாணவர்களும் தொடர் போராட்டத்தை நடத்தி வந்த நிலையில், குடியரசு நாளுக்கு முதல்நாள், மதுரையில் மாணவர்கள் ஊர்வலத்தில் பெரும் வன்முறை வெடித்தது. மாணவர்கள் மீதான தாக்குதல் வெறியாட்டத்தில் பலர் படுகாயமுற்றனர். இந்தத் தகவல் காட்டுத்தீயாகப் பரவி, தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்களை அறிந்த சிவலிங்கத்திற்கு, தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

## கோடம்பாக்கம் கிளை

சென்னை, கோடம்பாக்கம் விசுவநாதபுரத்தில் 1941-ஆம் ஆண்டு பிறந்தவர் சிவலிங்கம். சிவலிங்கத்தின் இளம் வயதிலேயே பெற்றோர் இறந்துவிட்டதால், அண்ணன் காளிமுத்து வளர்ப்பில் இருந்தவர். சென்னை மாநகராட்சி ஊழியராக மாதம் 75 ரூபாய் ஊதியத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

சிவலிங்கம் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தேவனூர் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தவர் என்கிற செய்தியும் உள்ளது. தேவனூரில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார் என்றும் பின்னர் பக்கத்து கிராமமான சட்டன்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியில் தினமும் இரண்டு மைல் நடந்து சென்று கல்வி கற்றார் என்றும், பின்னர் அவரது குடும்பம் சென்னைக்குக் குடிபெயர்ந்தது என்றும் சொல்லப்படுகிறது. சென்னையில் அவரது தமிழ் ஆசிரியராக, கழகக் கவிஞரான பொன்னி வளவன், அவருக்குத் தமிழ் மீதான அன்பை வளர்த்துள்ளார் என்றும் உறுதிப் படுத்தப்படாத குறிப்புகள் உள்ளன

அதேநேரத்தில், மொழியின் மீது தனது சிறு வயது முதலே தீராக் காதல் கொண்டிருந்தவர். 1938-ஆம் ஆண்டு முதலாம் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் வீராங்கனையாகக் கலந்து கொண்ட டாக்டர் தருமாம்பாள் பெயரில் அமைக்கப்பட்ட மன்றத்தில் சிறு வயதிலேயே உறுப்பினராக இருந்து வந்தவர்.

கழகப் பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த சிவலிங்கம், நுங்கம்பாக்கம் பகுதிக் கழகத்தின் பொருளாளராகவும் இருந்து வந்தார். மொழிப்பற்று, இனப்பற்று, இந்தி எதிர்ப்பு உணர்வு என இளம் வயதிலிருந்து அரசியல் பயிற்சி கொண்டிருந்த சிவலிங்கம், 1965-ஆம் ஆண்டு கழகத்தின் போராட்டக் களத்தில் உறுதியுடன் களம் கண்ட கழக வீரராக இருந்துள்ளார்.

> **“நாளைக்கு இந்தி ஆட்சி மொழி ஆகப்போகிறது. இது துக்க நாள். நாளை நான் கறுப்புச்சின்னம் அணியப் போகிறேன்” என்று அவர்களிடம் கூறிவிட்டு, அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.**

ஜனவரி 24-ஆம் தேதி இரவு உரையாடலில், தன் தங்கையிடம் “நாளை காலை நீ எங்கும் போகக் கூடாது, வெளியே ஒரே கலவரமாக உள்ளது. நான் அதிகாலையிலேயே ரயில்வே ஸ்டேஷனுக்கு கருப்புக் கொடியேற்றச் செல்கிறேன்’ என்று கூறியதுடன், ‘போராட்டக் களம் என்னை அழைக்கிறது என்பதால், என்னை பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்’ என்றும் தெரிவித்துள்ளார்.

25-ஆம் தேதி மாணவர்களின் போராட்டத்தால், தமிழ்நாடு பற்றி எரிந்த நிலையில், அன்று தன்னை எரித்துக் கொண்டு தமிழ் முழக்கத்துக்கு வலிமை கூட்ட திட்டமிட்டுள்ளார் சிவலிங்கம்.

பகலில், பெட்ரோல் டின்களுடன் சென்றவரை சிலர் பார்த்திருக்கின்றனர். ‘இந்த பெட்ரோல் டின் எதற்கு?’ என்று கேள்வி எழுப்பியவர்களிடம் ‘அலுவலக வேலையாக வாங்கிப் போகிறேன்’ என்று பதிலளித்துள்ளார்.

அன்றிரவும், தம் நண்பர்களுடன், கழகத் தோழர்களுடன் இந்தி ஆதிக்கம் குறித்து உணர்வுப்பூர்வமாக பேசி இருக்கிறார். “நாளைக்கு இந்தி ஆட்சி மொழி ஆகப்போகிறது. இது துக்க நாள். நாளை நான் கறுப்புச்சின்னம் அணியப் போகிறேன்” என்று அவர்களிடம் கூறிவிட்டு, அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

## இந்தி வீழ்க!

25-ஆம் தேதி அன்று இரவு, வழக்கம்போல் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். அதிகாலை 4 மணிக்கு அவர் அண்ணன் காளிமுத்து எழுந்து பார்த்தபோது, தம்பி சிவலிங்கத்தைக் காணவில்லை.

இந்த நேரத்தில் எங்கு சென்றிருப்பான் என எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில்தான், வீட்டுக்கு எதிரே உள்ள மைதானத்தில் தீப்பிழம்பாய் ஒரு உருவம் ‘தமிழ் வாழ்க, இந்தி ஒழிக’ என முழக்கமிட்டுக்கொண்டே எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்து மக்கள் ஓடியுள்ளனர்.

காளிமுத்து அந்த இடத்துக்குச் சென்ற போதுதான், அது தனது தம்பி சிவலிங்கம் என அறிகிறார். உடல் முழுவதும் எரிந்த சிவலிங்கம் அவர்கள் கீழே வீழ்ந்துவிட, அருகில் 2 பெட்ரோல் டின்கள் கிடந்தன. அதற்கு அருகிலேயே, “இந்தி ஆட்சிமொழி ஆவதைக் கண்டித்துத் தீக்குளித்துச் சாகிறேன்” என்றும் “உயிர் தமிழுக்கு; உடல் நெருப்புக்கு” என்கிற வாசகங்கள் எழுதப்பட்ட காகிதங்களும் கிடந்தன. சிவலிங்கத்தின் எழுத்தைத் தெரிந்து கொண்ட அண்ணன், கருகிக் கிடந்த உடலைக் கட்டிப்பிடித்துக் கதறினார்.

இருபத்து நான்கு வயது சிவலிங்கம் 26.01.1965 அன்று விடியற்காலையில் 4 மணிக்கு வீட்டைவிட்டுச் சென்று தீக்குளித்து மாண்டார். சின்னச்சாமியைப்போல ஒரு பத்துத் தமிழனாவது உயிர் நீத்தால்தான் நமது தமிழுக்கு விமோசனம் கிடைக்கும். இந்தி ஆதிக்கம் ஒழியும்” என்று கூறிய சிவலிங்கம், அவர் வழியில் தானும் தீக்குளித்து மொழிப்போரில் தன்னையே கொடையாகக் கொடுத்த இரண்டாவது தமிழனாக எழுச்சியூட்டினார்.

அவரது இழப்பு, அன்று கழகத்தின் வீரஞ்செறிந்த போராட்டக் களத்துக்குச் சான்றாக அமைந்தது. அண்ணாவும், கலைஞரும் மூத்த முன்னோடிகளும் அவரைப் போல மாய்த்துக்கொண்ட மொழிப்போர் மறவர்களை தமிழ்நாட்டில் நினைவூட்டிக் கொண்டே இருந்தனர். இந்த நாள் கழகத்தால் என்றென்றும் உயர்த்திப் பிடிக்கப்பட்டு கொண்டே இருக்கும்.

**...துடிக்கும்**

## கீழடிக்கு மெய்நிகர் சுற்றுலா!

தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான், ‘இரும்பின் காலம்’ தொடங்கியது என்ற வரலாற்றுப் பெருமிதம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர் அவர்கள், அதே நிகழ்ச்சியில் ‘கீழடி அருங்காட்சியகம்’ இணையதளப் பக்கத்தையும் தொடங்கிவைத்தார். கீழடி குறித்த வரலாற்றை விவரிக்கும் வகையிலான காணொலிகள், செயலி, அறிக்கைகள் ஆகியவை இந்தப் பக்கத்தில் கிடைப்பது மட்டுமல்லாமல், கீழடிக்கு நம்மை ‘மெய்நிகர் சுற்றுலா’ அழைத்துச் செல்வதுதான், இந்த இணையதளப் பக்கத்தின் மிக முக்கிய சிறப்பம்சமாக உள்ளது.

நுழைவாயிலில் இருந்து ஒவ்வொரு அறையாக, 360 டிகிரி கோணத்தில் கீழடி அருங்காட்சியகத்தை மெய்நிகராகப் பார்க்கும்போது, நேரில் பார்ப்பது போன்ற உணர்வைப் பார்வையாளர்களுக்குத் தருகிறது. கீழடி வரலாறு, கட்டுமானங்கள், கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், அணிகலன்கள் உள்ளிட்டவை குறித்த முழு விவரங்கள் அருங்காட்சியகத்தில் கிடைக்கின்றன. அதை உலகின் எந்த மூலையில் இருந்து வேண்டுமானாலும் நேரில் பார்ப்பது போலவே பார்க்கலாம் என்ற வசதியைத் தருகிறது இந்த இணையதளப் பக்கம்.

காட்சிக்கூடம், நிகழ்வுகள், தொடக்க விழா, அகம், புறம் என தனித்தனியாக இணையதளப் பக்கத்தில் படங்களும் பதிவேற்றப்பட்டுள்ளன. கீழடியின் சிறப்புகளை விவரிக்கும் ‘கீழடி – வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரீகம்’ என்ற சிறு வெளியீடும் மின் நூலாகப் பதிவேற்றப்பட்டுள்ளது. இலவசமாகப் பதிவிறக்கம் செய்து இந்நூலைப் படிக்கலாம். தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் வங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒடியா, அசாமி, பஞ்சாபி உள்ளிட்ட பிற மாநில மொழிகளிலும், ஆங்கிலம், ஜப்பானீஸ், இத்தாலி, ருஷ்யன், ஸ்பானிஸ், உருது, போர்ச்சுகீசியம், ஜெர்மன், சைனீஸ் போன்ற சர்வதேச மொழிகளிலும் இந்நூல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. திராவிட நாகரீகத்தைத் திக்கெட்டும் பரவச் செய்திருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.

இணையதளத்தைப் பார்வையிட: https://keeladimuseum.tn.gov.in/

## ஃப்ளாஷ்பேக்



### கொஞ்சம் வாழ்த்து; கொஞ்சம் உரையாடல்!



செ.யுவராஜ்

2006-ஆம் ஆண்டு ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக நான் நியமிக்கப்பட்டேன். அப்போது, எங்கள் ஒன்றியச் செயலாளர் நா.ஜெகதீசன் அவர்களை அழைத்துக்கொண்டு பேராசிரியர் அன்பழகன் ஐயாவிடம் வாழ்த்துப் பெற அவர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். எங்களை வீட்டுக்குள்ளே அழைத்த ஐயா, “என்ன விஷயம்?” என்று கேட்டார். ஒன்றிய இளைஞர் அணிப் பொறுப்புக்கு என்னை நியமித்ததற்காக வாழ்த்துப் பெற வந்தேன் என்று கூறியவுடன், “நல்லது, கட்சி வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்கின்ற அணி இளைஞர் அணிதான். பொறுப்போடு பணியாற்ற வேண்டும்” என்று வாழ்த்தினார். அப்போது சிறிது நேரம் எங்களுடன் உரையாடினார். அந்த வாழ்த்தும், உரையாடலும் மறக்க முடியாதவை.

**– செ.யுவராஜ், புழல் ஒன்றிய இளைஞர் அணி, துணை அமைப்பாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### முதல் மாவட்ட மாநாடு!

1949-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி தி.மு.கழகத்தின் ‘முதல் மாவட்ட மாநாடு’ திருச்சியில் நடைபெற்றது.‘திருச்சியும் மகிழ்ச்சியும்’ என்ற தலைப்பில், தலையங்கம் தீட்டி இச்செய்தியை ‘திராவிட நாடு’ இதழில் பதிவு செய்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா. வள்ளிமுத்து தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டை பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தொடங்கிவைத்தார். கழகம் தோன்றி நான்கே மாதங்களில் இம்மாநாடு நடைபெற்றிருந்தாலும், அப்போதே திருச்சியில் சுமார் 40 கிளைக்கழகங்கள் உருவாகி யிருந்தன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

729

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131